# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில்
## 02.10.2009 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸுர் அவர்கள் சூரா அல் பக்கராவின் 154 முதல் 158 வரையுள்ள வசனங்களை ஓதினார்கள்:**

***அதன் பொருள்:*** *நம்பிக்கை கொண்டவர்களே! பொறுமை, பிரார்த்தனை இவற்றின் மூலம் (அல்லாஹ்விடம்) உதவி கோருங்கள். நிச்சயமாக அல்லாஹ் பொறுமையாளர்களுடன் இருக்கின்றான்.*

*அல்லாஹ்வின் வழியில் கொல்லப்படுகிறவர்களை, இறந்தவர்கள் எனக் கூறாதீர்கள். மாறாக, அவர்கள் உயிருள்ளவர்களே. ஆனால், நீங்கள் உணர்ந்து கொள்வதில்லை.*

*ஓரளவு பயத்தாலும், பசியாலும் செல்வம், உயிர்கள், கனி வகைகள் ஆகியவற்றின் இழப்பாலும் நிச்சயமாக நாம் உங்களைச் சோதிப்போம். (தூதரே!) பொறுமையாளர்களுக்கு நீர் நற்செய்தியைக் கூறுவீராக.*

*அவர்கள், தங்களுக்குத் துன்பம் ஏற்படும் போது, நிச்சயமாக நாம் அல்லாஹ்வுக்கே உரியவர்கள்; அவனிடமே திரும்பிச் செல்பவர்கள் எனக் கூறுவார்கள்.*

*இத்தகையோருக்குத் தங்களின் இறைவனிடமிருந்து, அருளும் கருணையும் இறங்குகின்றன. இவர்களே நேர்வழி பெற்றவர்கள். (2:154-158)*

**ஸப்ர் – பொறுமை** என்பது பரந்த பொருளை உள்ளடக்கியது. **முதலாவது,** மனிதன் கஷ்டம் வரும்போது அழுது புலம்புதல், குறைபட்டுக் கொள்ளுதல் ஆகியவற்றிலிருந்து விலக வேண்டும். சோதனைகள் இறைவன் புறமிருந்து வரும் போது அதுபற்றி எந்தப் புகார் கூறுதலும், மனத்தாங்கலும் இன்றி ஏற்றுக் கொள்ளுதல் வேண்டும். ஏனெனில் சில துன்பங்களால் ஒப்பாரி வைத்து துக்கத்தைக் கூறி புலம்பும் போது அது இறைவனை (குறை) கூறுவதாகவும், குஃப்ர் ஆகவும் ஆகி விடுகிறது.

**இரண்டாவது** பொறுமை என்பதன் பொருள், உறுதியான பாதத்துடன் நிலைநிற்றல் ஆகும். **மூன்றாவது பொருள்**, இறை கட்டளைகளை உறுதியாக நின்று செயல்படுத்துவதாகும். அடுத்து **இன்னொரு பொருள்**, அல்லாஹ் எவற்றிலிருந்து விலகியிருக்குமாறு கூறியுள்ளானோ அவற்றிலிருந்து விலகியிருத்தல் வேண்டும்.

எனவே, பொறுமையில் இரண்டு வழிமுறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. சகிப்புத்தன்மை, விவேகம், துணிவுடன் பிரச்சனைகளை எதிர்கொள்ளுதல், சோதனைகளின் போது உறுதியான பாதத்துடன் நிலைநிற்றல் போன்றவற்றிலிருந்து நமது பாதம் ஒருபோதும் பின்வாங்கக் கூடாது. அதேபோன்று உங்களது ஈமானிலும் எந்தப் பின்வாங்கலும் இருக்கக் கூடாது. இரண்டாவது வழிமுறை, அல்லாஹ்வின் ஏவல், விலக்கல்களைக் கவனித்து வாழ்வைக் கழித்தவாறு இறைவன் முன்னால் எப்போதும் குனிந்து இருத்தல் ஆகும்.

இந்த வசனத்தில் **ஸப்ர்** உடன் **ஸலாத்** என்ற சொல்லையும் பயன்படுத்தி தொழுகையின் பக்கமும் கவனமூட்டப்பட்டுள்ளது. பல சந்தர்ப்பங்களில் பல்வேறு அகராதிகளில் **ஸலாத்** என்ற சொல்லுக்கு தரப்பட்ட பொருள்களின் மொத்த சுருக்கத்தை கவனத்தில் கொண்டு பார்க்கும் போது தொழுகையின் பக்கம் கவனம் செலுத்துங்கள். தொழுகை தவிர மற்ற நேரங்களிலும் துஆக்களில் கவனம் செலுத்துங்கள். மார்க்கத்தில் உறுதியாக நிலைத்திருங்கள். இஸ்திக்ஃபாரில் கவனம் செலுத்துங்கள். திக்ரே இலாஹியின் பக்கம் கவனம் செலுத்துங்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது **தரூது (ஸலவாத்)** ஓதுங்கள் என்ற அனைத்துப் பொருள்களும் அடங்கும்.

ஆகவே, இந்த வசனத்தில் ஒரு உண்மையான மூஃமினின் பெருமை, சிறப்பம்சம் விளக்கப்பட்டுள்ளது. எப்போதும் சோதனைகள், துன்பங்கள் வரும் போது முழுமையான பொறுமை, விவேகத்துடன் சகித்துக் கொள்ளுங்கள். எந்த நிலையிலும் நற்செயல்கள் செய்வதிலும், உயர் நல்லொழுக்கத்திலும், திக்ரே இலாஹி, தரூது ஓதுதல் ஆகியவற்றில் இந்த சோதனைக் காலத்தில் அதிகமாக கவனம் செலுத்துங்கள். இந்த சிந்தனையுடன் இறைவனிடம் நீங்கள் உதவி கேட்பீர்கள் என்றால், உறுதிப்பாட்டில் நிலைத்திருப்பீர்கள் என்றால் பிறகு இந்த சோதனை தற்காலிகமானது; பிறகு நமக்கு வெற்றியின் காலம் விரைவில் வந்து விடும் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

ஒரு மூஃமின் இறுதியாக சாயும் இடம் இறைவனின் பக்கமே ஆகும். ஓர் அஹ்மதி நான் இறைவனை நம்பவில்லை (நவூதுபில்லாஹ்) என்று கூறவே முடியாது. ஏனெனில் ஈமானில் பலவீனம் ஏற்பட்டால் ஓர் அஹ்மதி அஹ்மதியாகவே இருக்கமாட்டார். அஹ்மதிய்யத் அங்கேயே முடிந்து விடும். இஸ்லாம் அவரது உள்ளத்திலிருந்து தாமாகவே வெளியேறி விடும்.

எனவே ஓர் அஹ்மதி முஸ்லிம் இறைவன் மீது **ஈமான் பில் கைப்** – மறைவானவற்றின் மீது நம்பிக்கை கொள்கிறார். எனது எந்த நிலையிலும், உதவிக்காக நான் சாயும் இடம் இறைவனே ஆவான் என்ற உறுதி இருக்க வேண்டும். எனவே சோதனைகள், துன்பங்கள் எதிரிகள் தரப்பிலிருந்து பல்வேறு வகையில் நம்மிடம் வருகின்றன. அறிவு மற்றும் ஈமானின் இலக்கணம் அதுவே ஆகும். பிறகு அந்த இறைவனுடன் உள்ள தொடர்பை அதிகரிக்க முயற்சி செய்ய வேண்டும். இந்த சோதனைகளிலிருந்து விடுதலை தரக்கூடியதும், அடைக்கலம் தருபவனும் இறைவன் ஆவான். சோதனைகளின் வேளைகளில் தனிச்சிறப்பான ஒரு விவேகத்துடன் இறைவன் முன் குனிவோம் என்றால், குழந்தையின் துன்பத்தை அன்புடன் விலக்க முயற்சி செய்கின்ற தாயை விட அதிகமாக இறைவன் துன்பங்களை விலக்க முன் வருகிறான்.

அல்லாஹ் இந்த வசனத்தின் கடைசியில் **இன்னல்லாஹ மஅஸ் ஸாபிரின்** – நிச்சயமாக அல்லாஹ் பொறுமையாளர்களுடன் இருக்கிறான் என்று கூறி, நான் நிச்சயமாக உங்களுக்கு உதவி செய்வேன் என்று கூறியுள்ளான். பொறுமையாளர்களுக்கு, துஆ கேட்பவர்களுக்கு உதவி செய்வேன். ஆனால் நீங்களும் உறுதியுடன் எனது உதவியைக் கேட்டவாறு ஓர் அடிமைக்குரிய கடமையைச் செய்ய வேண்டும். கடமையை எப்படி நிறைவேற்ற வேண்டும் என்று பார்ப்பதற்கு முந்தைய நபிமார்களை கவனிக்க வேண்டும். அவர்கள் அதனை செய்து காட்டியுள்ளார்கள். உங்கள் பாதத்தை ஒருபோதும் பின்னால் எடுத்து வைக்காதீர். களங்கமற்ற முறையில் அல்லாஹ்வின் முன் குனியுங்கள். இந்த பொறுப்பு தான் இன்று ஒவ்வோர் அஹ்மதிக்கும் உள்ளது. நான் கடந்த குத்பாவிலும் பலமுறை கூறியுள்ளேன்.

பாகிஸ்தானிலும், அரபு நாட்டின் சில பகுதியிலும், இந்தியாவின் சில பகுதிகளிலும் அஹ்மதிகளின் மீது சில கொடுஞ்செயல்கள் இழைக்கப்படுகின்றன. பாகிஸ்தான் முன் எப்போதும் இல்லாத அளவுக்கு நிலை குலைந்து போய் உள்ளது. அநீதிகள் சில இடங்களில் உச்சகட்டத்தை எட்டியுள்ளன. மவ்லவிகள் எதையாவது கதைகளை ஜோடித்துக் கொண்டேதான் இருக்கின்றனர். சில இடங்களில் அரசு அதிகாரிகள் கடுமை காட்டுவதில் முனைப்புடன் நிற்கின்றனர். சில இடங்களில் அஹ்மதிகள் ஜுமுஆ தொழுகைக்கு செல்லவும் தடைகள் உள்ளன. நீங்கள் ஒன்றுகூடக் கூடாது என்று அஹ்மதிகளைப் பார்த்து கூறப்படுகின்றது. இந்நிலையில் முன்னரை விட அதிகமாக ஈமானில் உறுதியை உருவாக்குங்கள். உறுதியை ஏற்படுத்தியவாறு உங்கள் வெளிப்படையான செயல்களையும் மெருகூட்டுங்கள். இபாதத்தின் தகுதியையும் சிறப்பாக்குங்கள். பிறகு இறைவன் எப்படி உங்கள் உதவிக்கு வருகிறான் என்று பாருங்கள்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இதுபற்றி கூறுகின்றார்கள்:**

தூய்மையை மேற்கொள்ள முயற்சி செய்யுங்கள். மனிதன் தான் தூய்மையடைய முயற்சி செய்யும் போதுதான், தூய்மையைப் பெறுகிறான். தூய்மையான அந்த இறைவனைப் பெறுவதற்கு முதலில் மனிதன் தானே தூய்மையடைவது அவசியமாகும். ஆனால் இந்த நிஃமத்தை நீங்கள் எவ்வாறு பெற முடியும் என்பதைப் பறறி இறைவன் திருக்குர்ஆனில் கூறுகிறான். **வஸ்தயீனு பிஸ்ஸப்ரி வஸ்ஸலாத்** – பொறுமை,

தொழுகை இவற்றின் மூலம் இறைவனிடம் உதவி கேளுங்கள். தொழுகை என்றால் என்ன? அது துஆ, **தஸ்பீஹ்** – இறை தூய்மையை எடுத்துரைத்தல், **தஹ்மீது** – இறைவனின் புகழை எடுத்துரைத்தல், **தக்தீஸ்** – இறைவனின் பரிசுத்தத்தை எடுத்துரைத்தல், **இஸ்திக்ஃபார்** – பாவமன்னிப்புத் தேடுதல் மற்றும் **தரூது** – ஸலவாத் ஆகியவற்றுடன் இறைவனிடம் கவனமாக வேண்டுதலின் பெயராகும்.

ஆகவே, தொழுங்கள். அறியாத மக்களைப் போன்று வெறும் அரபி வார்த்தையை கூறுவது மட்டும் போதாது. எவருக்கு அரபி தெரியாதோ அவர் தமது மொழியில் துஆ செய்ய வேண்டும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

நீங்கள் தொழுங்கள். இறை வேதமாகிய திருக்குர்ஆன் மற்றும் நபிமொழிகளின் துஆக்கள் தவிர மற்ற துஆக்களையும் உங்கள் சொந்த மொழியிலேயே கேளுங்கள். மிகவும் உருக்கமும், பணிவும் மிகுந்த வார்த்தைகளை பயன்படுத்துங்கள். அதன் மூலம் எளிமை, பணிவின் தாக்கம் உங்கள் உள்ளத்தில் ஏற்படும். உங்கள் சொந்த மொழியில் துஆ செய்வதன் மூலம் உங்கள் உள்ளத்திலிருந்து அது வெளிவருவதால் துஆவில் கவனம் ஏற்படும்.

எனவே துஆவில் ஒரு குறிப்பான உருக்கத்தை ஏற்படுத்த வேண்டிய தேவை உள்ளது. அது உருவாகும் போது அடியானுடைய துஆவை அவனும் மிக உன்னதமான முறையில் ஏற்றுக் கொள்கிறான். அதனைப் பற்றி அல்லாஹ் கூறுகிறான்: துன்பத்திற்காளானவர், அவனிடம் பிரார்த்தனை செய்யும் போது அவரு(டைய வேண்டுதலு)க்குப் பதிலளித்து (அவரது) தீங்கை அகற்றி (வேண்டுதல் புரியும்) உங்களை இப்பூமி முழுவதற்கும் வாரிசுகள் ஆக்குபவன் எவன்? (27:63) திக்கற்றவனின் துஆவைக் கேட்பவன் யார்? உங்களையும், துஆ செய்பவர்களையும் ஒருநாள் இறைவன் இவ்வுலகின் வாரிசாக்குவான்!

துன்பத்தில் உழல்பவரின் திக்கற்றவரின் துஆ எத்தகையது எனில் அது உலகில் ஒரு புரட்சியை ஏற்படுத்தி வருகிறது. அல்லாஹ்வின் வழியில் துன்பங்களை சகித்துக் கொள்ள வேண்டியது வருகிறது. அதனை இறைவனுக்காக சகித்துக் கொள்பவரை விட இறைவனுக்கு நெருக்கமானவர் யார்? எனவே அல்லாஹ் நற்செய்தி கூறுகிறான்: பொறுமை, தொழுகையுடன் இந்த சேதனையை சகித்துக் கொண்டு கடந்து செல்லுங்கள். ஒரு நாள் நீங்களே இந்த பூமியின் வாரிசாகப்போகின்றீர்கள்.

இன்றைய காலத்தில் அஹ்மதிகள் சகித்துக் கொண்டிருக்கிற இந்த சோதனைகள் தியாகங்கள் வீணாகிப் போகக்கூடியயை அன்று. அஹ்மதிகள் செய்கின்ற இந்த தியாகங்கள் இன்று இல்லாவிட்டால் நாளை உலகில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தப் போகின்றவையாகும். நமது பணி எந்த புலம்பலும் புகாரும் இன்றி அல்லாஹ்விடம் உதவி கேட்டவாறு இந்த சோதனையை கடந்து செல்ல வேண்டும்.

அல்லாஹ்வுக்காக துன்பங்களை சகிப்பவர்கள் உயிர்களையும் கூட தியாகம் செய்ய வேண்டியது வரலாம். அல்லாஹ்வுக்காக உயிரைக் கொடுப்பவரின் தியாகம் ஒரு சாதாரண மனிதர் கொலை செய்யப்படுவது போன்றதன்று. இஸ்லாத்தின் ஆரம்ப காலத்தில் முறைப்படியான யுத்தம் தொடங்குமுன் எண்ணற்ற தியாகங்கள் செய்யப்பட்டன. பிறகு ஒரு காலகட்டம் வந்தது. அப்போது யுத்தம் நடந்தது. அங்கும் முஸ்லிம்கள் ஒப்பற்ற முறையில் தமது உயிர்களை அர்ப்பணித்தனர். இறந்தவர்கள் – இறந்த முஸ்லிம்கள் மார்க்கத்தின் உறுதிப்பாட்டிற்காக தமது இன்னுயிரை கொடுத்திருந்தனர். இறைவன் அவர்களின் தியாகத்தை ஏற்றுக் கொண்டவாறு கூறினான்.

அல்லாஹ்வின் வழியில் தமது உயிரைக் கொடுத்தவர்களை இறந்தவர்கள் என்று கூறாதீர்கள். அவர்கள் உயிருள்ளவர்கள். ஏனெனில் அவர்கள் மிகப்பெரும் இலட்சியத்திற்காக உயிரைக் கொடுத்துள்ளனர். ஒவ்வொரு வினாடியும் உயிர்த்தியாகம் செய்பவர்களுக்கு கூலியை அதிகப்படுத்திக் கொண்டே செல்கிறான். அதே வேளையில் மூஃமினின் ஜமாஅத் அவர்களின் தியாகங்களை நினைவில் கொண்டு அவர்களின் பெயரை உயிருடன் வைத்திருக்க வேண்டும். ஏனெனில் இந்த **ஷு**ஹதாக்களின் பெயரை உயிருடன் வைப்பது ஜமாஅத்தின் வாழ்வுக்கு உத்தரவாதம் அளிக்கிறது. அதன் மூலம் மற்ற மூஃமின்களும் மார்க்கத்திற்காக உயிர் தியாகம் செய்வதற்கு தயாராகி விடுகின்றனர். சமுதாயத்திற்காக

உயிரைக் கொடுப்பவர்களைக் கொண்ட ஒரு சமுதாயம் மரணிப்பதில்லை. பிறகு இறைவனுடைய மார்க்கத்திற்காக உயிரைக் கொடுப்பவர்களுக்கு இறைவனுடைய சிறப்பான உதவிகள் கிடைக்கின்றன.

இன்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய காலம் மார்க்கச் சண்டைகள் நிறுத்தப்படும் காலமாகும். இறைவழியில் இக்காலத்தில் எந்த கொலையும் நடக்காதா? மரணத்திற்குப் பிறகு அவர்கள் நிரந்தர வாழ்வைப் பெறுகின்றனர். மூஃமின்களின் ஆயத்தங்களையும் செய்து முடித்து விடுகின்றனர். ஆகரீன்(பின்னவர்)கள் அவ்வலீன்(முன்னவர்)களுடன் இணைவதற்கான தகுதியைப் பெற வேண்டியதிருந்தது. எனவே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் வாழ்நாளிலேயே ஆகரீன்கள் தமது இன்னுயிரை கொடுத்துள்ளனர். காபூல் நகரில் அது நடந்தது. தனது உயிரைக் கொடுத்து நிரந்தர வாழ்விற்கான வழியை நமக்கு காட்டித் தந்தனர். அதற்குப் பிறகு இன்று வரை ஜமாஅத்தினர் உயிரைக் கொடுக்கும் நடந்து கொண்டே இருக்கின்றனர். உயிரைக் கொடுத்துக் கொண்டே இருக்கின்றனர். ஒவ்வொரு அஹ்மதி ஷஹீதுகளின் ஒவ்வொரு துளி இரத்தமும் அவரது மறு உலக வாழ்வில் அவர்களது தகுதியை உயர்த்திக் கொண்டே செல்கிறது. அதே வேளையில் உலகில் ஜமாஅத்தின் நிரந்தர வாழ்வுக்கும் ஆயத்தங்களைச் செய்து விடுகிறது.

இவர்கள் ஜமாஅத்தின் தூண்டுதலால் தமது ஈமானை பலவீனமாக்குகின்றனர் என்று எதிரிகள் நினைக்கின்றனர். இது எதிரிகளின் எண்ணமாகும். இறைவன் கூறுகிறான்: இவர்களுக்கு உணர்வே இல்லை. உலகில் ஒரு புரட்சி ஏற்படுத்துபவர்கள இந்த உயிரிழப்புகளால் நின்று விடுவதில்லை. அல்லாஹ்வின் தக்தீரின் முடிவு, கடைசியில் இதே ஜமாஅத் தான் உலகில் இறைவனின் ஜமாஅத்தை நிலைநாட்டும் என்பதுதான். எனவே இன்றும் ஜமாஅத்திற்காக நிகழ்த்தப்படும் ஒவ்வொரு ஷஹாதத்தும், உயிர்த்தியாகமும் அதனை செய்கின்ற ஒவ்வொருவருக்கும் அவர்கள் குழந்தையாயினும், வயோதிகராயினும் அவர்களுக்கு ஒரு புதிய ரூஹ் ஊதப்படுகிறது. பிறகு ஜமாஅத்திடம் கூறிக் கொள்கிறேன். உங்களிடம் பற்று விசுவாசத்தின் ஒரு புதிய அம்சத்தை நீங்கள் எடுத்து வைக்குமாறு இச்சூழ்நிலை உங்களை தூண்டுகிறது. அத்தகைய மக்களைப் பார்த்துதான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள். இவர்களின் இக்லாஸ் மற்றும் பற்று ஆகியவற்றைப் பார்க்கும் போது வியப்பு ஏற்படுகிறது.

எனவே அஹ்மதிகளுக்கு உயிரிழப்பு ஏற்படுத்தினால் அஹ்மதிய்யத்தை விட்டு திரும்பி விடுவர் என்று எதிரிகள் தவறாக எடைபோடுகின்றனர். இல்லை, ஒவ்வொரு சோதனையும் அஹ்மதிகளின் ஈமானை உறுதியாக்கிக் கொண்டேதான் செல்கிறது. அல்லது இந்த எதிரிகளின் இந்த சோதனைகளின் மூலம் அஹ்மதிய்யத்தை முடிவுக்கு கொண்டு வந்துவிடலாம் என்று தவறாக எடைபோடுகின்றனர். ஜமாஅத்திற்கு பாகிஸ்தானிலும் மற்றும் சில நாடுகளிலும் தப்லீக் செய்வதற்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. ஆனால் ஜமாஅத்திற்கு எதிராக இவர்கள் செய்கின்ற வேலைகள் நமது தப்லீகிற்கு புதிய வாசல்களை தாமாகவே திறந்து தந்து விடுகின்றன. பலர் நேரடியாக இங்கு கடிதம் எழுதி தாம் பைஅத் செய்ய விரும்புவதாக தெரிவிக்கின்றனர். அத்தகைய கடிதங்கள் பாகிஸ்தானிலிருந்தும் மற்ற அரபு நாடுகளிலிருந்தும் கூட வருகின்றன. எதிர்ப்புகள் கூட நம்மை முன்னேற்றதின் பக்கம் எடுத்துச் செல்லக் கூடியவையாக உள்ளது. எதிரிகள் சில உயிர்களை எடுக்கலாம். பொருள்களை அழிக்கலாம். நமது கட்டடங்களை சிதைக்கலாம். நமது மஸ்ஜிதுகளின் கட்டுமானத்தை தடுத்து நிறுத்தி விடலாம். ஆனால் நமது ஈமானை ஒருபோதும் பலவீனப்படுத்திவிட இயலாது. ஏனெனில் இந்த சோதனைகள் இறைவன் நம்முடன் இருக்கிறான் என்று உறுதிப்படுத்துகின்றன.

அடுத்த வசனத்தில் இறைவன் இந்த சோதனையின் எல்லா வகைகளையும் விரிவாக விளக்கி, பொறுமை செய்பவர்களுக்கு நற்செய்தி கூறியுள்ளான்.

இறைவன் கூறுகின்றான்: உங்களை பயத்தின் மூலம் சோதிப்போம். துஆவின் மூலம் இந்த பயத்தின் சோதனையிலிருந்து கடந்து விட்டீர்கள் எனில் உங்களுக்கு நற்செய்தி! நீங்கள் நமது அருள்களுக்கு வாரிசாகி விடுவீர்கள். பயத்தில் எத்தனை வகைகள் உள்ளன. எதிரிகளின் தாக்குதல் குறித்த பயம்; மவ்லவிகளின் விஷமங்கள குறித்த பயம், இன்னின்ன காரணங்களுக்காகவும் வழக்குகள் போடப்படுவது பற்றிய பயம், நாட்டின் சட்டங்கள் பற்றிய பயம், அரசு அதிகாரிகளின் மிரட்டல்கள் குறித்த பயம். ஆனால் ஒரு மூஃமின் எந்தவகை பார்லிமெண்ட் தீர்ப்புகளுக்கு பயந்தோ, நான் மேற்கூறிய பயங்களினாலோ தனது ஈமானை

இழப்பதும் இல்லை. அல்லது ஈமானை பலவீனமாக்க விடுவதும் இல்லை. பிறகு பசியினால் சோதிக்கப்படும். இந்த சோதனையும் மிகப் பரந்த அளவில் நம்முன் உண்டு. ஆங்காங்கே சில சம்பவங்கள் நடக்கின்றன. ஜமாஅத்திற்கு எதிராக 1974-ல் நடந்த சம்பவங்கள் அதற்கு சான்று. அஹ்மதிகளுக்கு எதிராக மிகவும் கடுமை காட்டப்பட்டன. வீட்டிற்கு உணவுப் பொருட்களை வந்து சேரவும் அஹ்மதிகளுக்கு அனுமதியளிக்கப்படவில்லை. அஹ்மதிகள் தாமே சுயமாக பஜாருக்கு சென்று உணவுப் பொருள்களை வாங்கி வரவும் அனுமதிக்கப்படவில்லை. அப்படியே அஹ்மதிகள் வெளியில் வந்தாலும் அவர்களுக்கு உணவுப் பொருட்கள் விற்கக் கூடாது என்று கடைக்காரர்களுக்கு கட்டுப்பாடு விதிக்கப்பட்டிருந்தது. பிறகு அஹ்மதிகளின் பொருள்களைக் கைப்பற்ற முயற்சி செய்யப்படுகிறது. பொருட்களை மீட்பதற்கு அஹ்மதிகள் சட்ட உதவியை அணுகினால் நீதிபதி ஆசனத்தில் இருப்பவர்களிடம் இவர் காதியானி என்று கூறப்படுகிறது. பெயரைக் கேட்டவுடனே அவர்களும் அஹ்மதிகளின் பக்கமுள்ள நியாயத்தைக் கண்டு கொள்வதில்லை. 1974 -ல் ஜமாஅத்தின் ஒரு சொத்தையே (ரப்வாவின் அருகில் ஓர் நிலம்) மவ்லவிகளிடம் ஒப்படைக்கப்பட்டது. சில காலம் முன்பு ரப்வாவின் அருகிலுள்ள ரப்வாவைச் சேர்ந்த இடத்தையும் தவறான முறையில் பறித்துக் கொண்டனர். இது எமது இடம் என்று வாதிட்டனர். குழந்தைகள், பொருள்கள் மூலமும் சோதிக்கப்படுகின்றது. குழந்தைகளின் கல்வியை வீணாக்க முயற்சி செய்யப்படுகிறது. ஸ்கூலில் குழந்தைகளுக்கு இழிவை ஏற்படுத்துகின்றனர். குழந்தைகள் அவமானத்தால் பள்ளிக்கே போகமாட்டேன் என்று சொல்லும் அளவுக்கு அவமானப்படுத்துகின்றனர். மெடிக்கல் காலேஜில் சிறிது காலத்திற்கு முன்பு பையன்கள் படிப்பிலிருந்து நிறுத்தப்பட்டனர். 4 சிறுவர்கள் மீது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை இழிவுபடுத்தியதாக கூறி அவர்கள் மீது அநீதியிழைத்து சிறையிலும் அடைத்தனர். பெற்றோர்கள் அஹ்மதியத்திலிருந்து தவ்பா செய்து விலகுவதாக அறிவித்தால் 4 சிறுவர்களையும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை இழிவுபடுத்தியதாக கூறிய வழக்கில் இருந்து விடுவிப்பதாக கூறினர். ஏனெனில் அவர்களின் விருப்பமெல்லாம் அஹ்மதிகள் எப்படியாவது பயந்து போய் தமது ஈமானிலிருந்து விலகிவிட வேண்டும். அஹ்மதிகளுக்கு ஏதாவது துன்பம் கொடுத்து அவர்களுக்கு இழப்பை ஏற்படுத்த நினைக்கின்றனர். ஆனால் அஹ்மதிகளே உண்மையான முஸ்லிம்கள் என்று இவர்கள் அறிவதில்லை. அஹ்மதிகள் குர்ஆன் கரீமின் ஒவ்வொரு எழுத்தின் மீதும் உறுதியான நம்பிக்கை கொள்கின்றனர். இப்படியெல்லாம் சோதிக்கப்படுவார்கள். இன்னின்ன வழிமுறைகளில் சோதிக்கப்படுவர் என்று இறைவன் முன்னரே திருக்குர்ஆனில் கூறிவிட்டான். ஆகவே உறுதியான பாதத்தை எடுத்து வைத்தல், முடிவை எதிர்பார்த்து இருத்தல், ஒவ்வொரு துன்ப வேளையிலும் இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன் – நாம் அல்லாஹ்விடமிருந்தே வந்தோம்; அவனிடமே திரும்ப உள்ளோம் என்று கூறுதல், இதுவே ஓர் அஹ்மதியின் நிலையாகும். இவ்வாறு துக்கம் தரப்படும் போது அஹ்மதிகள் பொறுமை காட்ட வேண்டும். பொறுமை என்பது என்ன? கண்டிப்பாக துக்கத்தை உணருங்கள். அதனால் உங்கள் புலன்கள் கிளர்ந்தெழுந்து விட வேண்டாம். புலம்பல், புகார் வேண்டாம். மாறாக, இந்த ஒவ்வொரு துக்கம் சோதனையின் போதும் இறைவன் பக்கம் பார்வை செலுத்த வேண்டும். நிச்சயமாக இந்த சோதனை தற்காலிகமானது என்று உறுதிகொள்ள வேண்டும். இதன் விளைவாக அல்லாஹ் எனக்கு நன்மையையே தருவான்; உயர்வையே தருவான் என்று உறுதிகொள்ள வேண்டும். ஒவ்வொரு நஷ்டத்தின் போதும் எனது உயிர், பொருள், குழந்தைகள் எல்லாமே இவ்வுலகின் தற்காலிக பொருள்கள்தான் என்று உணர வேண்டும். இவற்றை அல்லாஹ்வின் வழியில் தியாகம் செய்யும்போது, அல்லாஹ்வின் அருளுக்கும் கருணைக்கும் முன்னரை விட அதிகமாக நான் வாரிசாவேன் என்று கருத வேண்டும்.

மனிதன் இன்னாலில்லாஹி கூறும்போது முழுமையாக அதில் நிலைத்திருக்கவும் வேண்டும். நாமும் அல்லாஹ்வுக்குரியவர்கள். நமது பொருள், குழந்தைகள் அனைத்தும் கூட இறைவனுக்குரியவை. எனவே இந்த நிஃமத்துகளை அல்லாஹ் நமக்கு தந்துள்ளான். அதனை அவன் திரும்ப எடுத்துக் கொண்டதற்காக நாம் அழுது புலம்பத் தேவையில்லை. ஏனெனில் இன்னா இலைஹி ராஜிவூன் – நாமும் கூட அவனிடமே போகப் போகிறோம். நாம் அவனிடம் செல்லும்போது மறுவுலக வாழ்வில் இவ்வுலகை விட உன்னதமான வாழ்க்கையை நமக்கு தருவதாக இறைவன் வாக்களித்துள்ளான். ஒரு மூஃமினுக்கு இவ்வாறு சிந்தனை வரும் போது நஷ்டங்கள் எந்த வகையிலாவது ஏற்படும் போது தற்காலிகமாக அவருக்கு அது துன்பத்தை ஏற்படுத்தினாலும் அவரது வாழ்வில் அது எவ்வகையிலும் தடையாக இருக்காது.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

நீங்கள் மூஃமினாக இருக்கின்ற நிலையில் இந்த துன்பங்களைப் பற்றி தவறாக, தீயதாக நினைக்காதீர்கள். முழுமை பெறாத மூஃமின் தான் சோதனைகளை தீயதாகக் கருதுவார்.

திருக்குர்ஆன் கூறுகிறது. ஓரளவு பயத்தாலும், பசியாலும் செல்வம், உயிர்கள், கனி வகைகள் ஆகியவற்றின் இழப்பாலும் நிச்சயமாக நாம் உங்களைச் சோதிப்போம். (தூதரே!) பொறுமையாளர்களுக்கு நீர் நற்செய்தியைக் கூறுவீராக.

அவர்கள், தங்களுக்குத் துன்பம் ஏற்படும் போது, நிச்சயமாக நாம் அல்லாஹ்வுக்கே உரியவர்கள்; அவனிடமே திரும்பிச் செல்பவர்கள் எனக் கூறுவார்கள். (2:156-157)

எவ்வகை மனக்கஷ்டமும் அதனால் அவர்கள் அடைவதில்லை. அல்லாஹ்வின் திருப்தியை விரும்புவர். இறை விருப்பம் தமக்கு எதை தருகிறதோ அதிலேயே இருக்க விரும்புவர். அத்தகையவர்களே பொறுமையாளர்கள் ஆவர். அத்தகையோருக்காக இறைவன் கணக்கில்லாத அருள்களை வைத்துள்ளான். இந்த எதிர்நடவடிக்கையைத் தான் ஓர் அஹ்மதி எடுக்க வேண்டும். அதைத்தான் இன்று வரை ஜமாஅத் மக்கள் காட்டியும் வருகின்றனர். இதே எதிர் நடவடிக்கைதான் நமது முன்னேற்றத்தின் அடையாளமும் ஆகும். அதற்காக நாம் அல்லாஹ்விடம் எப்போதும் துஆ செய்ய வேண்டும். சோதனைகள் கஷ்டங்களிலிருந்து தப்பிப்பதற்கு துஆ செய்வதும் நம்மீத கடமையாகும். ஆனால் அல்லாஹ்வின் தரப்பிலிருந்து ஒரு துன்பம் வந்தால் பிறகு உறுதியான பாதத்துடன் நிலைநிற்றல் மிகப்பெரும் நிபந்தனையாகும். இதுவே அல்லாஹ்வின் புறமிருந்து எண்ணற்ற கூலியைப் பெற்றுத்தரக் காரணமாக இருக்கும். இவற்றை விளக்கிய பிறகு அல்லாஹ் பொறுமையாளர்களுடன் இருக்கிறான். ஷஹாதத்தின் வாய்ப்பைப் பெற்றவர்கள் நிரந்தர வாழ்வைப் பெறுகின்றனர். பொறுமையாளர்களுக்கு நற்செய்திகள் உள்ளன. மிகப் பெரும் நற்செய்திகள் உள்ளன. அவர்கள் தங்களது விருப்பங்களை இறை விருப்பத்தின் கீழ் கொண்டு வந்து விட்டனர் என்று கூறுகிறான்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

சோதனைகள் இறைவனால் நியமிக்கப்பட்டவரின் ஜமாஅத்திற்கு நிச்சயம் வருகின்றன. சோதனை வராமல் எந்த மஃமூரும் (நியமிக்கப்பட்டவர்) வரவில்லை. ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் கைது செய்யப்பட்டார்கள். என்னென்ன கஷ்டங்கள் எல்லாம் தரப்பட்டன. ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களுடன் எப்படி நடந்து கொள்ளப்பட்டது. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடன் சமுதாயம் எப்படி நடந்தது? விஷயம் என்னவென்றால், இந்த எல்லா துன்பங்களுக்குப் பிறகு இறுதி முடிவு நல்லதாக அமைகிறது. இதுவே இறைவனின் நடைமுறையாகும். நபிமார்களின் ஜமாஅத் ஆடம்பர வாழ்க்கை வாழ்ந்து சுவையான உணவு உண்டு கொண்டு சொகுசாக வாழ்ந்து வருமாறு செய்வது தான் என்று அல்லாஹ்வின் நடைமுறை எனில் பிறகு மற்ற உலகியல்வாதிகளுக்கும் மூஃமின்களுக்கும் என்ன வித்தியாசம்? நிம்மதி, சொகுசுகள் நிறைந்த வாழ்வு மட்டும்தான் மூஃமின்களுக்கு இருக்கும். எந்த துன்பமும் சகிக்க வேண்டியிராது என்றால், மற்ற உலகியல்வாதிகளும் இறைவனின் ஜமாஅத்திற்கு வித்தியாசம் இருக்காது. புலாவ் மற்றும் நெய் சோறு உண்டு அல்ஹம்துலில்லாஹ் என்று கூறுவது இறைவனுக்கு நன்றி செலுத்துவது மிகவும் எளிய காரியமாகும். ஒவ்வொருவரும் எந்த சிரமமுமின்றி இதனைக் கூற முடியும்? ஆனால் துன்பத்தின்போதும் அதே உள்ளத்துடன் ஹம்து கூறுவது தான் சிரமமாகும். எனவே நிம்மதியான வாழ்வு வாழும் போது இறைவனுக்கு நன்றி கூறுவது போன்று துன்பத்தின்போதும் நன்றி கூற வேண்டும்.

**மேலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

மஃமூர்களின் ஜமாஅத்திற்கு பேரதிர்ச்சிகள், பூகம்பங்கள் வருகின்றன. விதவிதமன ஆபத்துகள் ஏற்படுகின்றன. மேலும் இந்த சோதனைகளினால் இன்னொரு பயன் என்னவென்றால், பக்குவப்படாதவர்கள் யார்? பக்குவம் அடைந்தவர்கள் யார்? என்று தெரிந்து விடுகிறது. பக்குவமற்றவர்களின் பாதம் நிம்மதியின் பக்கம் மட்டும் எடுத்து வைக்கப்படுகிறது. சோதனைகள் வந்தால் அழிந்து விடுகின்றனர். எனவே சோதனைகள் வரும்போது அவர்களின் கால் நின்று விடுகிறது. எனவே சோதனைகள் பக்குவமடையாதவர்கள்

யார் என்பதை பிரித்துக் காட்டுகிறது. உறுதியான ஈமான் கொண்டவர்கள் பிரச்சனைகளிலும் மேற்கொண்டு முன்னேறிக் கொண்டே செல்கின்றனர்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

என்னுடனும் அதே அல்லாஹ்வின் நடைமுறை தான் உள்ளது. சோதனைகள் வராவிட்டால் எந்த அடையாளமும் வெளிப்படாது. இறைவனுக்கு தனது அடியார்களின் மீது அன்பு இவ்வாறு தான் வெளிப்படுகிறது. துன்பங்களின் போது அவர்கள் இறைவன் பக்கம் திரும்புகின்றனர். அல்லாஹ்வின் வெகுமதிகள் இவ்வாறு நிலைத்திருப்பவர்களுக்கு கிடைக்கின்றன. மகிழ்ச்சியான நாட்கள் பார்ப்பதற்கு நன்றாக இருக்கிறது. ஆனால் முடிவில் எதுவும் ஆகப்போவதில்லை. அதிகம் உல்லாசமாக வாழ்வதால் இறைவனுடன் உள்ள தொடர்பு முறிந்துபோய் விடுகிறது. இறைவனது அன்பு இவ்வாறுதான் வெளிப்படுகிறது. அவன் முதலில் சோதனையில் போடுகிறான். அந்த சோதனையின் மூலம் தனது அடியானின் மகத்துவத்தை வெளியில் கொண்டு வருகிறான். ஈமானின் உறுதிப்பாடு தான் அடியானின் உண்மையான சிறப்பாகும்; அது வெளிப்படுகிறது. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை கைது செய்வதற்காக கட்டளையிட்ட மன்னன் அதே இரவில் கொல்லப்பட்டான். இந்த அடையாளம் அச்சோதனை வரவில்லை என்றால் எப்படி வெளிப்பட்டிருக்கும்? பிறகு **இன்னா ஃபதஹ்னாலக ஃபத்ஹன் முபீனா –** நிச்சயமாக நாம் மிகத் தெளிவான ஒரு வெற்றியினை வழங்கியுள்ளோம் (48:2) என்ற குரல் அவர்களுக்கு எப்படி கேட்கச் செய்யப்பட்டிருக்கும். சோதனை வராவிடில் இவை நடந்திருக்காது. ஒவ்வொரு முஃஜிஸாவும் சோதனையுடன் தொடர்புள்ளது. கவனமின்மை, சொகுசு வாழ்க்கையுடன் இறைவனுக்கு எந்த தொடர்பும் இல்லை. வெற்றிக்கு மேல் வெற்றி மட்டுமே வந்து கொண்டிருந்தால் பிறகு உருக்கம், கவனம் முற்றிலும் காணாமல் போய் விடும். துன்பமான ஆபத்தான சூழ்நிலைகள் வருகின்றன. ஏனெனில் உங்களிடம் உருக்கம் உருவாக வேண்டும் என்று இறைவன் விரும்புகிறான். எனவே அல்லாஹ் கூறுகின்றான்; பொறுமையாளர்களுடன் இருக்கிறேன். இறை திருப்திக்காக தமது உயிரை தருபவர்கள் நிரந்தரமான வாழ்வைப் பெறுகின்றனர். பொறுமையாளர்களுக்கு நற்செய்தி என்றெல்லாம் இறைவன் கூறுகின்றான். அதே வசனத்தில் நான் ஓதிய அந்த கடைசி வசனத்தில் மீண்டும் அதில் நினைவூட்டுகிறான். இத்தகைய மக்களே அல்லாஹ்வின் பரக்கத்துகள் ரஹ்மத்துகளுக்கு வாரிசுகள் ஆவர். அவர்களே உண்மையான நேர்வழி பெற்றவர்கள். ஏனெனில் ஸலவாத்தும் மின் ரப்பிஹிம் என்ற சொற்கள் உள்ளன. ஸலவாத் என்பதற்கு மக்ஃபிரத் (பாவமன்னிப்பு), பரக்கத் (அபிவிருத்தி) என்ற பொருள்களும் உள்ளன. எனவே பொறுமை காட்டுபவர்கள் அல்லாஹ்வின் மக்ஃபிரத் மற்றும் பரக்கத்தின் காட்சியைக் காண்பர். அவர்களின் ஆன்மீகத் தகுதியை அல்லாஹ் உயர்த்துகிறான். ஸலவாத்தும் மிர்ரப்பிஹிம் என்றால் அல்லாஹ் மூஃமின்களுக்கு துஆவை தருவதில்லை. மாறாக மக்ஃபிரத்தையும், பரக்கத்தையும் தருகிறான். ரஹ்மத்தும் பரக்கத்தும் ஒரு மூஃமினுக்கு கிடைக்கும் போது பிறகு அவருடைய ஆன்மீக தகுதி உயர்ந்து விடுகிறது. அல்லாஹ்வின் ரஹ்மத்தும் அவருக்கு கிடைக்கும். உலக இழப்புகளையும் அல்லாஹ் பிறகு சரியாக்கி விடுகிறான். இறைவனுக்காக தியாகங்களைச் செய்த அஹ்மதிகளை நீங்கள் ஆய்வு செய்து பாருங்கள். அல்லாஹ் வழியில் தியாகம் செய்த எந்த அஹ்மதியின் கையையும் எதிரிகள் தாம் விரும்பியதற்கேற்ப பிடிக்க முடிந்ததில்லை. மாறாக, அஹ்மதிகளுக்கு துன்பம் கொடுத்த அவர்களுக்கே சில தீய விளைவுகள் வந்த சேர்ந்தன. அஹ்மதிகளை சில சுயநலத்திற்காக முஸ்லிம் அல்லாதவர்கள் என்று கூறினர். பிறகு இறைவனின் உதவிகள் அஹ்மதிகளுக்கு கிடைத்ததைப் பார்த்ததும் இவர்களுக்குப் புரியவில்லை. நாம் இம்மக்களுக்கு அறிவைத் தருமாறு அல்லாஹ்விடம் துஆ செய்ய முடியும். அதனை செய்வோம். இந்த வசனத்தின் கடைசியில் இறைவன் கூறுகிறான். **உலாயிக ஹுமுல் முஹ்ததூன்** – எவர் அல்லாஹ்வின் ரஹ்மத், மக்ஃபிரத், பரக்கத் இவற்றைப் பெறுகிறாரோ அவரே உண்மையில் நேர்வழியில் இருப்பவர் ஆவார். பிறகு ஹிதாயத்தை பெற்ற பிறகு அதில் முன்னேற்றமும் அடைந்து கொண்டே செல்ல வேண்டும். ஏனெனில் அம்மக்கள் சோதனையின் போது பொறுமை, துஆவைப் பயன்படுத்துகின்றனர். எனவே அல்லாஹ் அவர்களுக்கு வழிகாட்டலும் வழங்கிக் கொண்டே செல்கிறான். அவர்களும் அதில் தொடர்ந்து செல்கின்றனர். அல்லாஹ்வின் சந்திப்புக்கான வழி அவர்களுக்கு காட்டப்படுகின்றது. இவர்களே நிரந்தரமாக அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெறுபவர்களாவர்.

அல்லாஹ்விடம் எப்போதும் துஆ செய்ய வேண்டும். அல்லாஹ் தனது அருளால் மட்டுமே ஒவ்வொரு அஹ்மதியையும் துன்பங்களில் இருந்து விடுவிப்பான். இறை தக்தீருக்கு ஏற்ப ஒரு அஹ்மதிக்கு ஏதாவது சோதனையைக் கடக்க வேண்டியதேற்பட்டால் அல்லாஹ் அந்த அஹ்மதிக்கு ஸப்ர் துஆவுடன் அச்சோதனையைக் கடக்க வாய்ப்பும் வழங்குவானாக. அல்லாஹ் எப்போதும் நமக்கு வழிகாட்டிக் கொண்டே இருப்பானாக.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்;**

உங்கள் துன்பங்களை நான் பார்க்கும் போது மற்றொரு புறம் அல்லாஹ்வின் வல்லமைகளையும் பார்க்கிறேன். அதனை நான் சுயமாக அனுபவித்துள்ளேன். எனவே சோதனைகளின் போது நான் சிறிதும் நிலைகுலைவதில்லை. ஏனெனில் அவன் ஆற்றல் உள்ளவனும், சர்வ சுதந்திரமானவனும் ஆவான் என்று அறிகிறேன். பெரும் ஆபத்துகளிலிருந்தும் ஒரு முக்லிஸ் (களங்கமற்ற தூய நல்லடியார்) தப்பி விடுகிறார். ஒருவருக்கு அதனைப் பற்றிய ஞானத்தை வழங்க நினைக்கும் போது அல்லாஹ் அவரை கண்டிப்பாக சோதிக்கிறான். அதன் மூலம் அவனே எதிர்பார்க்க முடியாத ஒன்றையும் எதிர்பார்க்கத்தக்கதாக மாற்றக்கூடியவன் என்று அவ்வடியார் புரிந்து கொள்கிறார். அவன் மிகவும் ஆற்றல்மிக்கவனும், மீண்டும் மீண்டும் கருணை காட்டுபவனும் கண்ணியத்திற்குரியவனும் ஆவான். எனவே அல்லாஹ்வின் அருள் நம்மை விட்டு தூரம் போய் விட்டது என்று சோதனையின் வேளையில் கருதிவிடக் கூடாது.

**பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்;**

அவனது ரஹ்மத்தின் வாசல் எப்போதும் திறந்துள்ளது. எப்போதும் அவனது கருணையை எதிர்பார்க்க வேண்டும். உருக்கத்துடன் தவ்பா, இஸ்திக்ஃபார் செய்ய வேண்டும். துன்பங்களின் போத ஒரு மனிதர் தவ்பாவை செய்தவாறு தமது பலவினங்களை – எளிதில் விட முடியாத பலவினங்களில் இருந்தும் விலகி இருப்பாரோ அவரக்கு அவரது அந்த நற்செயல் அவரது பாவங்களுக்குரிய மிகப்பெரும் பரிகாரமாக ஆகி விடுகிறது. ஒரு சோதனை, துன்பம் வரும்போது ஒருவர் அதனால் தன்னிடம் உள்ள ஒரு தீமையை விட்டுவிடுகிறார் எனில் அதிலிருந்து பாடம் படிக்கிறார் எனில் அவருக்கு அந்த செயல் ஒரு மகத்தான பரிகாரம் ஆகும். அவரது உள்ளம் திறப்பதுடன் அந்த சோதனை, இருளும் விலகுகிறது. ஒளியின் எதிர்பார்ப்பு உருவாகிறது. அவரது உள்ளம் திறப்பதுடன் சோதனையால் ஏற்பட்ட இருளும் ஒளியாக மாறிவிடுகிறது. ஒளியின் எதிர்பார்ப்பு உருவாகிறது.

எனவே இக்காலத்தின் நிலைமைகளைக் குறித்து நான் விளக்கினேன். ஜமாஅத் அன்பவர்கள் முழு உலகிலும் துஆவின் பக்கம் கவனம் செலுத்த வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. தமது தவறுகளின் பக்கம் மிகவும் கவனம் செலுத்த வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. தனிப்பட்ட முறையில் இவ்வாறு ஒவ்வொருவரும் முயற்சி செய்யும் போது அது அனைத்து துஆக்களும் ஒன்றுசேர்ந்து வானத்தின் பக்கம் எழுகிறது. அல்லாஹ்வின் பரக்கத்தையும் ரஹ்மத்தையும் ஈர்த்துக் கொண்டு வருகிறது. அல்லாஹ் ஒவ்வொரு ஜமாஅத் அன்பருக்கும் இந்த ரூஹுடன் சிறப்பாக துஆவின் பக்கம் கவனம் செலுத்த வாய்ப்பு அளிப்பானாக. ஏனெனில் நிலைமைகளைப் பார்க்கும் போது பாகிஸ்தான் அஹ்மதிகள் இன்னும் அதிகம் சோதனைகளை சகித்துக் கொள்ள வேண்டியது வரும் என்று தோன்றுகிறது. ஆனால் அறிவற்றவர்கள் ஓர் இலக்கு வைத்துள்ளனர். இவ்வாறு ஒட்டுமொத்த எதிர்பார்ப்பையும் அஹ்மதிகளின் பக்கம் திருப்பி நாட்டின் பிரச்சனைகளிலிருந்து மக்களின் கவனத்தை திருப்பி விடலாம் என்பது இந்த அறிவற்றவர்களின் இலக்காகும்.

அஹ்மதிகளுக்கு அவர்கள் இழப்பை ஏற்படுத்தவில்லை. தம்மையும் அறியாமல் நாட்டைச் சிதைக்க முயன்று கொண்டிருக்கிறோம் என்பதை அவர்கள் அறிவதில்லை. நாட்டுக்குத்தான் இழப்பை ஏற்படுத்த முயற்சி செய்கின்றனர். பாகிஸ்தானுக்காக மிகவும் துஆ செய்ய வேண்டிய தேவை உள்ளது. அல்லாஹ் கருணை காட்டுவானாக.

இன்று நான் இன்னொரு ஷஹீதின் ஜனாஸா தொழுகை நடத்துவேன். சில நாட்களுக்கு முன்பு ஷஹீதாக்கப்பட்டுள்ளார். அவரது பெயர் முஹம்மது அஃஸம் தாஹிர் சாஹிப். இவரது தந்தை முஹம்மது அஹ்ஸன் சாஹிப். செப்டம்பர் 26 –ல் இவர் ஷஹீதாக்கப்பட்டார். தனது சகோதரரின் மகளின் திருமணத்தில்

கலந்து விட்டு, குடும்பத்துடன் சகோதரர் வீட்டிலிருந்து திரும்பிக் கொண்டிருந்த போது 8.30 மணி அளவில், வழியில் வீடுகள் மிகவும் குறைவாக இருந்த ஓரிடத்தில் துப்பாக்கியைக் காட்டி இருவர் அவரை நிறுத்தினார்கள். அப்போது மோட்டார் சைக்கிளின் Balance இழந்து கீழே விழுந்து விட்டார். குழந்தையும் கீழே விழுந்து விட்டது. குழந்தையை தூக்குவதற்காக செல்லும்போது தாக்குதல் தொடுப்பவர் அருகில் வந்து துப்பாக்கியை காதில் வைத்து விட்டார். பிறகு அதே இடத்தில் சுட்டு ஷஹீதாக்கி விட்டார். மருத்துவப் பயற்சி எடுத்துக் கொண்டிருந்தவர். வஸிய்யத் செய்தவர். நல்லியல்பு கொண்டவர். கட்டுப்பாடு, விருந்தோம்பல் குணம் கொண்டவர். துஆவிலும் தொழுகையிலும் பேணுதல் உள்ளவர். Secretary Mal ஆக இருந்து வந்தார். இவர் இரண்டு மகன்கள், ஒரு மகளை நினைவாக விட்டுச் சென்றுள்ளார். ஐந்து சகோதர சகோதரிகள் உள்ளனர். ஒரு சகோதரர் ஜமாஅத்தின் கொள்கைப் பரப்புனராக உள்ளார். பெற்றோர் உயிருடன் உள்ளனர். இந்த தியாகியின் பெற்றோர், மனைவி, மக்களுக்கு பொறுமையையும் சகிப்புத் தன்மையையும் அல்லாஹ் வழங்குவானாக. நமது அன்பிற்குரியவர்கள் அல்லாஹ்வின் வழியில் ஷஹீதாவதன் மூலம் நமது ஈமானில் அல்லாஹ் ஒரு உறுதிப்பாட்டை வழங்குவானாக. இறைவன் தன்னுடன் தொடர்பை அதிமாக்குவானாக.

இன்னும் இரு ஷஹீதுகளும் உள்ளனர். ஜமாஅத்தின் காரணத்தால் அல்ல. இன்று தேசவிரோதக் கும்பல் ஒன்று நாட்டை (பாகிஸ்தானை) துண்டாட முயற்சி செய்து கொண்டிருக்கின்றன. அந்த கும்பலால் இந்த இருவர் கொலை செய்யப்பட்டுள்ளனர். இன்னாலில்லாஹி வஇன்னா ராஜிவூன். அவர்களுள் ஒருவர். ரியாஸ் அஹ்மத் சாஹிப். இன்னொருவர் இம்தியாஹ் அஹ்மத் சாஹிப். இருவரும் சகோதரர்கள். பெஷாவரில் ஒரு வங்கியின் அருகில் கடந்து சென்று கொண்டிருந்தனர். அப்போது அங்கு நடந்த குண்டு வெடிப்பில் ஷஹீதாகி விட்டனர். ஒருவருக்கு 40 வயது. திருமணமாகி விட்டது. குழந்தைகள் உள்ளனவர். இன்னொருவருக்கு 20 வயது. இந்த இருவருக்கும் கூட ஜுமுஆவுக்குப் பிறகு ஜனாஸா காயிப் தொழுகை நடத்துவேன். இன்னொரு ஜனாஸா U.K. -வின் முன்னால் National Sadr மற்றும் அமீர் செப்டம்பர் 27 -ல் வஃபாத் ஆனார்கள். நீண்ட காலம் U.K. -ல் இருந்தார். நான் கூறியது போன்று National Ameer பொறுப்பிலும் இருந்தவர். முதலில் டாக்காவில் இருந்தார். அங்கு அமீராக இருந்தார். கல்கத்தாவிலும் அமீராக இருந்தார். ஃபஸ்லே உமர் ஃபவுண்டேசனின் உறுப்பினராக இருந்தார். சவுத்ரி ஸஃபருல்லாஹ் கான் சாஹிபின் Secretary ஆக இருந்தார். அவருடன் நல்ல தொடர்பு இருந்தது. சவுத்ரி ஸஃபருல்லாஹ் கான் சாஹிப் உடன் Secretary என்ற முறையில் பல இடங்களுக்கு சென்று வந்தவர். ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்கள் 1984 -ல் இங்கே வந்தவுடன் குர்ஆன் கரீம் ஆங்கில மொழிபெயர்ப்பை சரிபார்க்க ஒரு குழு ஏற்படுத்தினார்கள். அதில் இவரையும் சேர்த்திருந்தார்கள். கிலாஃபத்துடன் விசுவாசத்துடன் இருப்பார். ஜமாஅத்திற்கு வாழ்வை அர்ப்பணித்தவர்களுக்கு மிகவும் கண்ணியம் செய்யக் கூடியவர். அல்லாஹ் இவருக்கு மக்ஃபிரத் வழங்குவானாக. ரஹ்மத் செய்வானாக.

இன்னொரு ஜனாஸா மன்சூரா வஹ்ஹாப் சாஹிபா. இவர் கானாவைச் சேர்ந்தவர். ரப்வாவில் படித்தவர். ஆரம்ப காலத்தில் ஆப்பிரிக்காவில் இருந்து ரப்வா சென்று படிக்கச் சென்றவர்களுள் ஒருவர். அப்துல் வஹ்ஹாப் சாஹிப் ஆரம்ப கால முபல்லிக் ஆவார். இவரது மகள்தான் மன்சூரா சாஹிபா. அப்துல் வஹ்ஹாப் சாஹிப் இப்போது கானாவின் அமீர் மற்றும் Missionary Incharge ஆக உள்ளார். (மன்சூரா வஹ்ஹாப் சாஹிப்) சில நாட்கள் உடல்நலமின்றி இருந்தார். மருத்துவ சிகிச்சைக்கான ஏற்பாடு செய்யபட்ட நிலையில் இறை தக்தீரின்படி வஃபாத் ஆகி விட்டார். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன். இவரது ஜானாஸாவையும் தொழப்படும். அல்லாஹ் அவருக்கு மக்ஃபிரத் வழங்குவானாக. இவரது பெற்றோருக்கு பொறுமையை வழங்குவானாக.

★ ★ ★ ★ ★


**JUMUA KUTHBA**
**HADHRAT KHALIFATUL MASIH V**
**AT BAITUL FUTUH MOSQUE, LONDON**
**ON 02.10.2009**

Translated by : **Muallim M. NIZAMUDDIN**
Published by : **MAJLIS KHUDDAMUL AHMADIYYA**
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
**TELEFAX : 0462 - 2352456**